தொழில் போட்டியில் 2 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில்

3 பேர் கைது: ஆய்வாளர் பணியிட மாற்றம்

● தாம்பரம்

பெருங்களத்தூரில் நேற்று முன்தினம் அதிகாலை போதைப்பொருள் விற்பனை தொழிலில் ஏற்பட்ட மோதலில் அதே பகுதியை சேர்ந்த அண்ணாமலை (23), ஜில்லா (எ) தமிழரசன் (23) ஆகியோர் பெருங்களத்தூர் குண்டு மேடு சுடுகாட்டு பகுதியில் கழுத்து அறுத்து கொலை செய்யப்பட்டனர்.

இதனை தொடர்ந்து கொலையாளிகளை போலீஸார் தேடி வந்த நிலையில் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட கோபாலகிருஷ்ணன், ஆரிப், விஜய் ஆகியோரை போலீஸார் நேற்று கைது செய்தனர். இன்னும் சிலரை தேடி வரும் போலீஸார் கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பீர்க்கன்காரணை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிபவர் கணேஷ் பாண்டியன். இவர் பணிக்கு வந்த பின்பு காவல் நிலைய எல்லையில் இதுவரை 5 பேர் கொலை செய்யப்பட்டு உள்ளனர். ஜனவரி 31-ம் தேதி காதல் தகராறில் ஜீவா என்ற இளைஞர் குண்டு மேடு பகுதியில் தலையில் கல்லை போட்டு படுகொலை செய்யப்பட்டார். அதன் பின்பு மார்ச் 3-ம் தேதி சுமேஷ் என்பவர் நண்பருடன் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறு காரணமாக தலையில் கட்டையால் அடித்து கொலை செய்யப்பட்டார். கடந்த மாதம் முடிச்சூர் பகுதியில் இரு குழுவினர் இடையே ஏற்பட்ட மோதலில் விக்கி என்கிற விக்னேஷ் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் போதைப் பொருள் விற்பனையில் ஏற்பட்ட தகராறு காரணமாக 2 பேர் படுகொலை நடந்துள்ளது. போதைப் பொருட்களும் தங்கு தடை என்று விற்பனை செய்யப்படுவது தெரிந்தும் முறையான நடவடிக்கை எடுக்காததால் நேற்று அதிரடியாக காவல் ஆய்வாளர் சேலையூர் குற்றப் பிரிவுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

சர்வதேச நெகிழி பை இல்லாத தினம்

திருவள்ளூரில் விழிப்புணர்வு பேரணி

● திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில், சர்வதேச நெகிழி பை இல்லாத தினம் நேற்று திருவள்ளூரில், கொண்டாடப்பட்டது.

இதில், நெகிழி பையை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து, பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார் தலைமையில், கல்லூரி மாணவ-மாணவிகள் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர்.

தொடர்ந்து, சர்வதேச நெகிழி பை இல்லாத தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. சுமார் ஒன்றரை கிமீ தூரம் நடைபெற்ற இந்த பேரணியில், 200-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ-மாணவியர், ஆசிரியர்கள் பங்கேற்று, பொதுமக்களிடையே நெகிழி பையின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ரவிச்சந்திரன், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள் அருண்குமார், கயல்விழி, உதவிபொறியாளர்கள் ஸ்ரீலேகா, சபரிநாதன் பங்கேற்றனர்.

பள்ளிக்கரணை மருந்து கடையில் கொள்ளை

● பள்ளிக்கரணை

சென்னை பள்ளிக்கரணை மருந்து கடையில் பணியாற்றி வந்த கோகுலன்(21) என்பவரை மர்ம நபர்கள் 3 பேர் பணம் தருமாறு கத்தியை காட்டி மிரட்டி கல்லா பெட்டியை திறந்து அதில் இருந்த ரூ.17,000 பணத்தை எடுத்து கொண்டு தப்பினர். இதுதொடர்பாக குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு
அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில்
(தோடி நிவர்த்தி மற்றும் சர்ஷ்டியம்த பூர்த்தி சிறப்பு ஸ்தலம்)
(இந்து சமய அறநிலையத்துறை ஆளுகைக்கு உபட்டது)
வேளச்சேரி, சென்னை-600 042. போன்: 044-35971950

குறுகியகால மறுடெண்டர் மற்றும் பொது ஏல விளம்பர அறிவிப்பு

சென்னை-42, வேளச்சேரி, அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில், பசலி 1434 - 19.07.2024 முதல் 30.06.2025 வரையுள்ள காலத்திற்குக் கீழ்க்காணும் மறுடெண்டர்/பொது ஏலம் 19.07.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் திருக்கோயில் செயல் அலுவலர், வேளச்சேரி சரக ஆய்வர் மற்றும் தக்கார் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

வ. எண்	பலவகை குத்தகை உரிமங்கள் விவரம்	டெண்டர் / ஏல வைப்புத் தொகை	டெண்டர் / ஏல அடிப்படைக் கேள்வி	குறிப்பு
1	**அர்ச்சனைப் பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம்**	ரூ.50,000/-	ரூ.4,92,000/-	மறுடெண்டர் / பொது ஏலம்

மேற்குறிப்பிட்ட உரிமங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் 05.06.2024 முதல் 18.07.2024 வரை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் விற்பனை செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ.500/- பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் 19.07.2024 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படட். பின்னர் அன்றைய தினமே மாலை 4.00 மணி அளவில் டெண்டர்தாரர் / ஏலதாரர் மற்றும் பக்தர்கள் முன்னிலையில் டெண்டர் / பொதுஏலம் நடைபெறவுள்ளது. ஒப்பந்தப்புள்ளி / பொதுஏல நிபந்தனைகளைத் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

இரா.ப.த்பா, தக்கார் | செ.ம.தொ.இ / 658 / வரைகலை / 2024 | பெ.சக்தி, செயல் அலுவலர்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆன்மிக குரு பங்காரு அடிகளாரின் மூத்த மகன் கோ.ப.அன்பழகன், ஆதிபராசக்தி ஆன்மிக மக்கள் தொண்டு இயக்கத்தின் தலைவராகவும், ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி அறங்காவலராகவும், மேல்மருவத்தூர் ஆன்மிக இயக்க துணைத் தலைவராகவும் இருந்து வருகிறார். இவரது மகன் அ.ஆ.அகத்தியன் – எஸ்.ஷாலினி திருமணம் ஜூலை 7–ம் தேதி மேல்மருவத்தூரில் நடைபெற உள்ளது. இதற்கு வருகை தருமாறு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்து அழைப்பிதழ் வழங்கினார்.

ஆசிரியர்கள் 100 பேர் கைது

● காஞ்சிபுரம்

தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு (டிட்டோ ஜாக்) மாவட்ட கிளை சார்பில், காஞ்சிபுரத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கதிரவன், ஜெய்சங்கர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதில் 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு, ஆசிரியர்களின் பதவி உயர்வை பாதிக்கும் அரசாணையை ரத்து செய்ய வலியுறுத்தி சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

ஷாருக்கானுடன் முத்தூட் ஃபின்கார்ப் இணைந்து

'புக் மை கோல்ட் லோன்' பிரச்சாரம்

● சென்னை

137 ஆண்டுகள் பழமையான முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் முதன்மை நிறுவனமான முத்தூட் ஃபின்கார்ப் நிறுவனம் 'புக் மை கோல்ட் லோன்' எனும் பிரச்சாரத்தை ஷாருக்கானைக் கொண்டு தொடங்கியுள்ளது.

இந்தியாவில் முதன்முதலில் அதன் புதுமையான சேவையை முத்தூட் அறிமுகப்படுத்துகிறது. அதாவது, தங்கக் கடனை உடனடியாக, எந்த நேரத்திலும், எங்கிருந்தும் பதிவு செய்யலாம் என்பதே இதன் சிறப்பம்சமாகும். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இது, மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் சேவையுடன் ஒருங்கிணைத்து வாடிக்கையாளர்கள் ஓர் எளிய மிஸ்டு கால் மூலம் கடன் பெற வழிவகுக்கிறது.

முத்தூட் ஃபின்கார்ப் நிறுவனம் 50-க்கும் மேற்பட்ட நகரங்களில் உள்ள 3,700-க்கும் மேற்பட்ட கிளைகளின் மூலம் இந்த தனித்துவமான தங்கக் கடன் வழங்கும் சேவையை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் அணுகக் கூடியதாகவும் வசதியாகவும் ஆக்குகிறது.

இதுகுறித்து முத்தூட் ஃபின்கார்ப் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி ஷாஜி வர்கீஸ் கூறும் போது, "எங்கள் பிரச்சாரத்தின் மூலம் ஒவ்வோர் இந்தியருக்கும் நிதித் தேவையை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். ஷாருக்கானுடன் கூட்டு சேர்ந்து மேற்கொள்ளும், 'புக் மை கோல்ட் லோன்' பிரச்சாரமானது எங்களின் மிகப்பெரிய பாய்ச்சலைப் பிரதிபலிக்கிறது. தங்க நகைக்கடனை எங்களின் கிளைகளில் அல்லது வாடிக்கையாளர்கள் அவர்களின் வீடுகளில் இருந்தபடியே பெறமுடியும்" என்றார்.

முத்தூர் ஃபின்கார்ப் நிறுவனத்தின் 80869 80869 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் செய்வதன் மூலம் தங்க நகைக் கடனைப் பெற முடியும். இந்த பிரச்சாரம் இந்தி, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராத்தி மற்றும் குஜராத்தி மொழிகளில் ஒளிபரப்பப்படுகிறது. இந்த பிரச்சார வீடியோவை https://youtu.be/7AVoR2oyK-w லிங்க் மூலம் காணலாம்.

பரந்தூர் பசுமை விமான நிலையத்துக்கு எதிர்ப்பு

உண்ணாவிரதம் இருக்க முயற்சித்தவர்கள் கைது

● காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தை அடுத்த பரந்தூர் அருகே 13 கிராமங்களை உள்ளடக்கி 2-வது பசுமை விமான நிலையம் அமைக்க மத்திய, மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளன. இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏகனாபுரம் கிராம மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டம் 709 நாட்களாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்தப் போராட்டக் குழுவினர் 20 பேர் ஏகனாபுரம் அம்பேத்கர் சிலை முன்பு கூடி விமான நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர். பின்னர் போராட்ட குழுவினர் காஞ்சிபுரத்தில் உண்ணாவிரதம் இருக்க கிளம்பிய போது 100-க்கும் மேற்பட்ட காவல் துறையினர் அவர்களை கைது செய்து சுங்குவார்சத்திரம் தனியார் திருமண மண்டபத்துக்கு அழைத்துச் சென்று அங்கு தங்க வைத்தனர். இந்த கைது நடவடிக்கையின்போது கிராம மக்கள் போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தையொட்டி ஏராளமான போலீஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டனர்.

பி வெல் மருத்துவமனையின்

3-வது இன்டெர் யூனிட் ஸ்போர்ட்ஸ் காலா மீட்

நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் நடைபெற்றது

● சென்னை

மருத்துவத் துறையில் முன்னோடியாகத் திகழும் பி வெல் மருத்துவமனையின் 3-வது இன்டெர் யூனிட் ஸ்போர்ட்ஸ் காலா மீட் 2024, சென்னை, நந்தனம், ஒய்எம்சிஏ மைதானத்தில் நடைபெற்றது.

பி வெல் மருத்துவமனை குழுமத்தின் 13-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த விளையாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில், பி வெல் மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 200 வீரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு நிகழ்வில் பாட்மிண்டன், கைப்பந்து, கிரிக்கெட், சதுரங்கம், ரிங் பால், கேரம், தொடர் ஓட்டம் போட்டிகள் நடத்தப்பட்டன.

பி வெல் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற 3–வது இன்டெர் யூனிட் ஸ்போர்ட்ஸ் காலா மீட் நிறைவு விழாவில் நடிகர் பிரசாந்த் பங்கேற்று, வெற்றியாளர்களுக்கு பரிசுக் கோப்பைகளை வழங்கினார்.

விழாவில் கிரிக்கெட் வீரர் கே.பி. அருண் கார்த்திக் பங்கேற்று, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பராமரிப்பதில் விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். புற்று நோயியல் மூத்த ஆலோசகர் டாக்டர் கே.அன்பரசி, அனைத்து விளையாட்டுகளிலும் பி வெல் மருத்துவமனையின் மகளிர் அணியின் முக்கியத்துவத்தையும், விளையாட்டுப் போட்டிகளின் நன்மைகளையும் எடுத்துரைத்தனர். எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்தோஷ் ஜேக்கப் பங்கேற்று, விளையாடும்போது ஏற்படும் காயங்களை எவ்வாறு தவிர்ப்பது மற்றும் காயத்துக்கு முதலுதவியாக என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய கண்ணோட்டத்தை வழங்கினார். சர்வதேச வாலிபால் வீரர் ஏ.மனோகரன், தேசிய அணி கைப்பந்து வீரர் எல்.எம்.மனோஜ், ஊக்கமளிக்கும் பேச்சாளர் கே.நித்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழாவின் இரண்டாம் நாளில் மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வை விதைக்கலாம் டிரஸ்ட் மற்றும் பி வெல் மருத்துவமனை இணைந்து நடத்தின.

நிறைவு விழாவில், தலைமை விருந்தினராக நடிகர் பிரசாந்த் கலந்து கொண்டார். அவர் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கோப்பைகளை வழங்கினார்.

பி வெல் மருத்துவமனை நிறுவனர், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் சி.ஜே. வெற்றிவேல் கூறும்போது, "பி வெல் மருத்துவமனைகள் தொடர்ந்து சுகாதாரத் துறையில் புதுமைகளை உருவாக்குகின்றன, இது போன்ற நிகழ்வுகள் ஊழியர்களின் நல்வாழ்வு, நிறுவனத்தின் வளர்ச்சியில் அவர்களுக்கான ஈடுபாட்டை எடுத்துக் காட்டுகின்றன" என்று கூறினார்.

தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.1 / செ.பொ (சி.வ.கோ) / 2024-25, நாள் 25.06.2024
(இரு உறை முறை)

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக செயற்பொறியாளர், நீ.வ.து, சிறப்பு வடிவமைப்புக் கோட்டம், சேப்பாக்கம், சென்னை-05 அவர்களால் மாநில நிதியில் கீழ்கண்ட பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது

வ எண்	பணியின் பெயர்	தோராய மதிப்பு	முன்வைப்புத் தொகை	பணிக்காலம்
1	Integrated System for Design and Drawings of Hydraulic structures for Irrigation (ISyDDHI) Phase-I (Pilot Project)	ரூ.45.70 இலட்சம் (சரக்கு மற்றும் சேவை வரி 18% உடபட)	ரூ.35,000/-	7 மாதங்கள்

- மேற்கண்ட பணியில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள வடிவமைப்பு வட்டம் மற்றும் அதன் கோட்டங்களுக்கு, வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் தயாரிப்பதற்கு தேவையான மென்பொருள் உருவாக்கம், சோதனை, பராமரிப்பு மற்றும் பயிற்சியளித்தல் ஆகியவை அடங்கும்.
- மேலும் தகவல் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு www.tntenders.gov.in வலைதள பக்கத்தை காணவும். மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இந்த வலைதள பக்கத்தில் 04.07.2024 முதல் 22.07.2024 பிற்பகல் 05.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
- மின்னணு ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 22.07.2024 பிற்பகல் 05.00 மணி வரை.
- மின்னணு ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 23.07.2024 பிற்பகல் 3.00 மணி

செ.ம.தொ.இ /2148 / ஒப்பந்தப்புள்ளி / 2024
செயற்பொறியாளர், நீ.வ.து., சிறப்பு வடிவமைப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை-5.

AU SMALL FINANCE BANK
Registered Office : 19-A Dhuleshwar Garden, Jaipur, Rajasthan, India, 302001.
www.aubank.in

LOAN AGAINST GOLD - AUCTION NOTICE ON "AS IS WHERE IS" BASIS

The below mentioned borrower/s have been issued notices to pay their outstanding amounts towards the loan against gold facilities availed from AU Small Finance Bank Limited ("Bank"). Since the borrower/s has/have failed to repay his/their dues, we are constrained to conduct an auction of pledged gold items/articles on **10 Jul 2024 between 11:00 AM - 3:00 PM (Time)** at below mentioned branches according to the mode specified therein. In the case of deceased borrowers, all conditions will be applicable to legal heirs. Please note that in the event of failure of the above auction, the bank reserves its right to conduct another auction without prior intimation.

E-Auction Branch Details (E-auction will be conducted by using Weblink https://gold.samil.in)

ALANGAYAM - 23660001743743 23660002303045 | **AMBUR -** 23660001724320 | **ARAKONAM - SWAL PET -** 23660001761729 | **CHIDAMBARAM -** 23660001765832 | **CHINNAMANUR -** 23660001159093 | **COIMBATORE - R S PURAM -** 23660001762737 | **KANCHIPURAM - ENNAIKARA STREET -** 23660001764593 | **KANIYAMBADI -** 23660001729681 23660001729811 | **KARAIKAL -** 23660001779505 | **LALGUDI -** 23660001793048 | **MADURAI-VAKKIL NEW STREET -** 23660001772968 | **MAILADUTHURAI -** 23660001763855 | **MANACHANNALLUR -** 23660001717073 | **MANAMADURAI -** 23660002324045 | **MANNARGUDI -** 23660001763075 | **NEEDAMANGALAM -** 23660001770122 23660002007913 | **OCHERI -** 23660001289867 23660001706864 23660001711184 23660001728653 | **PALANI -** 23660001720177 23660001735319 23660001750980 23660001751428 23660001757097 | **PATTUKOTTAI -** 23660002080223 | **PERIYAKULAM -** 23660001722203 23660001763265 23660001795064 | **PUDUCHERRY - BHARATHI STREET -** 23660001796393 | **PUDUKOTTAI -** 23660001560777 23660001733643 | **SANKARAPURAM -** 23660001773786 | **SIRKALI -** 23660001742875 | **THIRUCHIRAPALLI -** 23660001719820 23660001731646 23660001737445 23660001777519 | **THIRUVANNAMALAI - VENGIKKAL -** 23660001796843 | **TINDIVANAM -** 23660001761659 23660001773346 | **TIRUPPUR -** 23660001319893 | **VADIPATTI -** 23660001794696 | **VANIYAMBADI -** 23660001504944 23660001747716 | **VEDARANYAM -** 23660001726846 23660001737895 23660002137727 | **VELLORE -** 23660001770472 | **VELLORE - MUTHANNA NAGAR -** 23660001772648 | **VIRUDHACHALAM -** 23660001766390 23660001792630 |

Note: The auction is subject to certain terms and conditions mentioned in the bid form, which is made available before the commencement of auction.

Sd/-
Manager
AU Small Finance Bank Limited

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின்** (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	02.07.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	30589430000022 47809430000272 & 47809430000565	1) திரு. ஸ்பர்ஜன் டேனியல் எபினேசர், த/பெ. லின்சி, 2) திருமதி. D. லின்சி, M/o. ஸ்பர்ஜன் டேனியல் எபினேசர், 3) திருமதி. தீபா, க/பெ. ஸ்பர்ஜன் டேனியல் எபினேசர்	15-03-2022 22-06-2022	22-05-2024	ரூ.46,23,402.12 (ரூபாய் நாற்பத்தி ஆறு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து நானூற்றி இரண்டு மற்றும் பைசா பன்னிரெண்டு மட்டும்)	19.07.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.62,45,000/- (ரூபாய் அறுபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)	ரூ.6,24,500/- (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து ஐநூறு மட்டும்)	06.08.2024 நேரம் : காலை 11.00 மணிமுதல் மாலை 02.00 மணிவரை	05.08.2024, மாலை 5.00 மணி வரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.
	அட்டவணை சொத்து : அசையா சொத்து மற்றும் அதன் பகுதிகளும், புதிய கதவு எண். 5/170, புதிய எண். 5/536, விஜயநகரம் 2வது பிரதான சாலை, மேடவாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், கிராமநத்தம் ச.எண். 278/2, பட்டா எண். 271, பட்டாவின்படி ச.எண். 278/5 அளவுகள் 5460 சதுர அடியில் 1343 சதுர அடி பரப்பு அத்துடன் கட்டிடம் மற்றும் வசதிகள் உட்பட மற்றும் **நிலத்தின் எல்லைகள் : வடக்கில் :** நாச்சிசுந்தரம் அவர்களின் மனை, **தெற்கில் :** 30 அடி சாலை மற்றும் காந்தி சாலை, **கிழக்கில் :** திருமதி. பேச்சி என்கின்ற கிறிஸ்மஸ் அவர்களின் மனை, **மேற்கில் :** 30 அடி சாலை மற்றும் விஜயநகர் 2வது பிரதான சாலை. அளவுகள் : வடக்கு பக்கம் : 29 அடி 6 அங்குலம், தெற்கு பக்கம் : 25 அடி, கிழக்கு பக்கம் : 38 அடி 6 அங்குலம், மேற்கு பக்கம் : 18 அடி 9 அங்குலம். சைதாப்பேட்டை தெற்கு இணை-1 சார்-பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.									
2	45998645802522	1) M/s. Thenmozhi Furniture, அதன் பிரதிநிதி உரிமையாளர் திருமதி. வனிதா S, 2) திருமதி. வனிதா S, 3) திரு. சந்தானம், 4) திரு. ஸ்ரீராமுலு	16-08-2021	01-06-2024	ரூ.33,24,799.80 (ரூபாய் முப்பத்தி மூன்று இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி ஒன்பது மற்றும் பைசா எண்பது மட்டும்)	19.07.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.25,51,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சத்து ஐம்பத்தி ஒராயிரம் மட்டும்)	ரூ.2,55,100/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து நூறு மட்டும்)	06.08.2024 நேரம் : காலை 11.00 மணிமுதல் மாலை 02.00 மணிவரை	05.08.2024, மாலை 5.00 மணி வரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.
	அட்டவணை சொத்து : மனை எண்.11 தெற்கு கிழக்கு பகுதி கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் அதன் பகுதிகளும், ஆர்.எஸ்.எண். 37/1 மற்றும் 37/2, TSLR-ன்படி புதிய டி.எஸ்எண். 167, பிளாக் எண்.12, அளவுகள் 330 சதுர அடி பரப்பு, பாதை பரப்பு 44.5 சதுர அடி, 267 சதுர அடியில் (மேற்கு பகுதி) 1/6வது பங்கு (UDS), மொத்த பரப்பளவு 374.5 சதுர அடி, பழைய கதவு எண். 32/2, புதிய கதவு எண். 2/33, கண்ணையா செட்டி கார்டன், 6வது தெரு, பெரவள்ளூர் கிராமம், பெரம்பூர் புரசைவாக்கம் தாலுகா, அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டம், செம்பியம் சார்-பதிவு மாவட்டம் மற்றும் வடசென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது. **வடக்கில் :** திரு. புருஷோத்தமன் அவர்களின் காலி நிலம், **தெற்கில் :** கண்ணையா செட்டி கார்டன் 6வது தெரு, **கிழக்கில் :** திருமதி. ராதாம்மாள் அவர்களின் சொத்து, **மேற்கில் :** பொது பாதை. **அளவுகள் :** கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 19 அடி 7 1/2 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 20 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 16 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 16 அடி 6 அங்குலம்.									

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின் ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849) email : durai.murugan@janabank.com, & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 9590858249), email: ranjan.naik@janabank.com** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளு